24.8.84

## கோபுரக் கவசவண்டி நாசம் 8 இராணுவத்தினர் பலி

கரவெட்டி மேற்கில் கல்லுவம் மண்டான் பாதையில் இராணுவ வாகனங்களை நாசம் செய்வதற்காக விடுதலைப்புலிகள் நிலக்கண்ணி களைப் புதைத்து வைத்துள்ளனர் என்று துரோகிகள் அரச படைகளுக்கு அறிவித்திருக்கிறார்கள். ஆகஸ்ட் 24ம் திகதி பகல் 12—30 மணியளவில் கோபுரக்கவச வண்டி சகிதம் ஸ்ரீலங்கா இராணுவப்படை யினர் வெடிகுண்டுகள் புதைக்கப்பட்டிருந்த இடத்திற்கே வந்து பாதை யைத் துருவி ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். ஆயினும் நிதானமாகக் காத்திருந்த விடுதலைப்புலிகள் துல்லியமாகக் கணக்கிட்டு கோபுரக்கவச வண்டி குறிக்கப்பட்ட இடத்தை வந்தடையும் தறுவாயில் குண்டுகளை வெடிக்கச்செய்து கோபுரக் கவச வண்டியைப் பூரணமாக நாசம் செய்தனர். கோபுரக்கவச வண்டி குப்புறக் கவிழ்ந்து பூரணமாகப் பற்றி எரிந்தது. இத்தாக்குதலில் 8 இராணுவப்படையினர் அந்த இடத்திலேயே மரணமா னார்கள்.